අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/01/28/02/03
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2024.06.22

சுற்றுநிருப இலக்கம்: 24/2024

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,

அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,

அனைத்து பாடசாலை அதிபர்கள்

**"கைத்தொழில் முயற்சியாண்மைக் குழு" நிகழ்ச்சித்திட்டத்தை பாடசாலை முறைமையினுள் நடைமுறைப்படுத்துதல்.**

கல்வி அமைச்சு, கைத்தொழில் அமைச்சு மற்றும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆகியன ஒன்றிணைந்து எமது நாட்டின் கைத்தொழிற் துறையின் மேம்பாடு மற்றும் ஏற்றுமதி மைய உற்பத்திசார் பொருளாதார மேம்பாட்டினை குறிக்கோளாக கொண்டு தரம் 6 முதல் தரம் 13 வரையான மாணவர்களுக்கு அங்கத்துவம் பெற்றுக் கொள்ளக்கூடிய மாணவர் கழகம் ஒன்றாக "கைத்தொழில் முயற்சியாண்மைக் குழுக்களை" பாடசாலைகளில் ஆரம்பிப்பதற்காக இச் சுற்றுநிருபம் வெளியிடப்படுகின்றது.

நிகழ்காலத்தில் இலங்கைக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ள சமூக, பொருளாதார பிரச்சனைகளுக்கு கல்விச் செயன்முறையினூடாக தீர்வு தேடுவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். நாட்டின் எதிர்காலத்தின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திக்காக மாணவர்களை வலுவான மற்றும் தேர்ச்சி மிக்க மனித வளமொன்றாக கட்டியெழுப்புவதற்காக அவர்களை முயற்சியாண்மை மேற்கொள்ள வழிப்படுத்துவது தூரநோக்குடன் கூடிய தீர்வொன்றாகும்.

## 1. முயற்சியாண்மைக் குழுவிற்கான அறிமுகம்

முயற்சியாண்மை குழு எனப்படுவது, முயற்சியாண்மை முன்னோடிகளின் ஒன்று சேரலாகும். முயற்சியாண்மை முன்னோடி எனப்படுபவர், நாட்டின் கைத்தொழிற் துறையின் மேம்பாட்டினூடாக நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் செயற்படக்கூடிய, துணிச்சலுடன் கூடிய, நிலம், சிரமம், முதலீடு ஆகிய வளங்களை நேர்த்தியாக நெறிப்படுத்துவதற்கு விரும்பும், அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய குழுவினராவர். இந்த முயற்சியாண்மை முன்னோடிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு குழுவாக செயற்படுவதனூடாக, அவர்களது கருத்துக்களை பரிமாறிக் கொள்ளல், பிரச்சனைகளுக்கு கூட்டாக இணைந்து தீர்வு தேடல், முயற்சியாண்மைக்குரிய ஆளுமையினைக் கட்டியெழுப்புவதற்காக வலுமிக்கதொரு சுவராக செயற்படக்கூடிய இயலுமை ஏற்படுகின்றது.

எமது நாட்டில், பாடசாலைக் கல்வியின் பல்வேறு பாடங்களையும் கற்கும் மாணவர்களுக்கு முயற்சியாண்மை தொடர்பிலான அடிப்படை செயன்முறை ரீதியிலான அனுபவத்தை முறையாக அடைந்துகொள்வதற்கு வாய்ப்பு வழங்குவதனூடாக, பாடசாலைக் கல்வியின்

பின்னர் விளைதிறன் மிக்க பொருளாதார செயற்பாடொன்றில் ஈடுபடுவதற்கு முறையான கல்வியினூடாகவே ஏதேனுமொரு அனுபவத்தை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்துவது முக்கியமாகும். இதனூடாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறைகளை விளைதிறன் மிக்க வகையில் விருத்தி செய்வதற்கான குறிக்கோள்களையுடன் அடைந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்.

*2. முயற்சியாண்மைக் குழுக்களை தாபிப்பதன் குறிக்கோள்கள்*

I. தேசிய உற்பத்திக்கு சுறுசுறுப்புடனும், விளைதிறன் மிக்க வகையில் பங்களிப்புச் செய்யக்கூடிய முயற்சியாண்மையை முன்னிறுத்தி செயற்படக்கூடிய மாணவர் சமூகமொன்றை உருவாக்குதல்.

II. கைத்தொழில்களை உருவாக்குவதற்கும் புத்தாக்கங்களை செய்வதற்கும் அவசியமான முயற்சியாண்மைக் கலாசாரம் மற்றும் மனோநிலையை கட்டியெழுப்புதல்

III. தொழில்களை எதிர்பார்த்து கல்வி கற்பவராக இல்லாமல் நாட்டில் நிலவும் பிரச்சனைகளுக்கு தீர்வு வழங்கக்கூடிய தொழில் உருவாக்குனர் ஒருவரை சமூகத்திற்கு வழங்குதல்.

IV. சமூகத்தின் எந்தவொரு வகிபாகத்திலும் வெற்றிகரமாக செயற்படக்கூடிய திறமைகளை வழங்குவதற்காக முயற்சியாண்மைத் திறன்களைப் பெற்றுக் கொடுத்தல்.

V. சவால்களுக்கு மத்தியில் அவற்றிற்கு கொடுப்பதனூடாக அதனை தனக்குரிய வணிக ரீதியான வாய்ப்பொன்றாக மாற்றி அதனூடாக சுயமாக முன்னேறும் இலங்கையர்களை உருவாக்குதல்.

*3. அங்கத்துவம்*

தரம் 6 முதல் தரம் 13 வரையில் ஏதேனும் ஒரு பாடத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இக் குழுவில் இணைந்துகொள்ள முடியும். குழுவில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை 15 ஆகும் என்பதுடன், ஆகக் கூடிய மாணவர் எண்ணிக்கை 25 ஆகும். இவ் ஆகக் கூடிய மாணவர் எண்ணிக்கையைத் தாண்டியும் மாணவர்கள் குழுவில் இணைந்துகொள்ள முன்னிலையானால், அதிபரது அனுமதியுடன் மேலும் ஒரு குழுவினை உருவாக்கிக் கொள்ள முடியும். பாடசாலையொன்றில் ஒன்றிற்கு மேற்பட்ட முயற்சியாண்மைக் குழுக்கள் இருக்க முடியும் என்பதுடன், ஒவ்வொரு குழுவும் தமது குழுவிற்குரிய தொனிப் பொருள் ஒன்றைக் கொண்டிருப்பது குழுக்களை மேலும் மெருகூட்டும். அங்கத்தவர்களுக்கான மாதாந்த குழுக் கூட்டங்களை நடாத்தி, குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாட வேண்டும்.

*4. உத்தியோகத்தர் சபை மற்றும் பணிகள்*

I. பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் – குழுவின் தலைவர் ஆவார் என்பதுடன், வெளி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மற்றும் குழுவை வழிநடாத்தும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்,

II. கணக்காளர் – குழுவின் கணக்குச் செயற்பாடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல், இலாபம், நஷ்டங்களை கணிப்பிடுதல் மற்றும் கிரயத்தை கணக்கிடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

III. விற்பனை முகாமையாளர்/ விற்பனை உத்தியோகத்தர் - குழுவினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்கள் அல்லது சேவைகளை விளம்பரப்படுத்தல், விற்பனை செய்தல் போன்ற

செயற்பாடுகள் மற்றும் அதனுடன் சார்ந்த ஏனைய செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

*IV.* உற்பத்தி முகாமையாளர் – குழுவினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்கள் மற்றும் சேவைகளின் பண்புத்தரம் மற்றும் விளைதிறனைப் பேணுதல் வேண்டும். அவ்வாறே குழுவின் உற்பத்திகள் அவசியமாகும் சந்தர்ப்பங்களை அவற்றை தாமதமின்றி உற்பத்தி செய்து வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

ஏனைய அங்கத்தவர்கள் மேற்படி உத்தியோகத்தர் சபைக்கு தமது ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். பிரதான நான்கு உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக தேவைக்கேற்ப கணக்காய்வு உத்தியோகத்தர்/ மேற்பார்வையாளர் போன்ற பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை நியமித்துக் கொள்ள முடியும். உத்தியோகத்தர்கள் தவிர்த்து குழுவின் ஏனைய மாணவர்கள் பணிக்குழு உறுப்பினர்களாக கருதப்படுவர்.

- இவ் உத்தியோகத்தர்கள் ஒரு வருட காலத்திற்கு கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் வேறொரு குழு அப் பதவிகளுக்கு நியமிக்கப்படல் வேண்டும். ஏற்கனவே குழுவில் பதவிகளை வகித்த உத்தியோகத்தர்கள் அடுத்த தடவை குழுவின் பணிக்குழு உறுப்பினர்களாக செயற்படுவர்.

**5. மாகாண/ வலய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை நியமித்தல் மற்றும் அதிபரின் பணிகள்**

- முயற்சியாண்மைக் குழு நிகச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் மாகாண ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் மாகாணக் கல்விப் பணிப்பாளராலும், வலய ஒருங்கிணைப்பு செயற்பாடுகள் வலயக் கல்விப் பணிப்பாளராலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். உரிய ஒழுங்கமைப்பு செயற்பாடுகளுக்காக மாகாண/ வலய மட்டத்தில் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் வீதம் நியமித்துக் கொள்ள வேண்டும்.
- முயற்சியாண்மையினை கருப்பொருளாக கொண்டு பல்வேறு போட்டிகள், செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றனவற்றை மாகாணம்/ வலயத்தில் ஒழுங்கு செய்தல் வேண்டும்.
- இந் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அதிபரால் பாடசாலையின் இரண்டு ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளவேண்டும்.
- பிரயோக செயற்பாடுகள் மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளின் போது அவசியமான உபகரணங்களை களஞ்சியப்படுத்துவதற்காகவும், மாணவர்களுக்கு செயன்முறை ரீதியான அனுபவங்களை வழங்குவதற்காகவும் பாடசாலையினுள் பொருத்தமான ஒரு இடத்தை ஒதுக்கி கொடுத்தல் வேண்டும். (பாடசாலையினுள் வேலைத் தளம் ஒன்றை நடாத்திச் செல்வதற்கு அவசியமான ஒத்துழைப்பு மற்றும் சேவைகள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் மாவட்ட அலுவலகங்களூடாக வழங்கப்படும்.)
- முயற்சியாண்மைசார் செயற்பாடுகளில் திறமைகளை வெளிக்காட்டும் மாணவர்களை கௌரவித்தி பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை வருடாந்த பரிசளிப்பு வைபவங்களின் போது ஒழுங்குசெய்தல் வேண்டும்.
- எமது நாட்டின் கைத்தொழிற் துறையினை மையமாக கொண்டு பாடசாலைக் கல்விச் சுற்றுலாக்கள் போன்றனவற்றை ஒழுங்கு செய்தல் வேண்டும். (இதற்கு அவசியமான வழிகாட்டல்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வழங்கப்படும்,)
- முயற்சியாண்மைக் குழுக்களுக்குப் பொறுப்பாக செயற்படும் ஆசிரியர் இடமாற்றம் பெற்றுச் செல்லும் சந்தர்ப்பங்களில் அதற்காக வேறு ஆசிரியர் ஒருவரை அதிபர் நியமித்தல் வேண்டும். (குறித்த ஆசிரியரை பயிற்றுவிக்கும் செயற்பாடு இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்படும்)

## 6. முயற்சியாண்மை முன்னோடி இலச்சினைகள் மற்றும் பதக்கங்களை வழங்குதல்.

சகல அங்கத்தவர்களுக்கும் முன்னோடி இலச்சினை மற்றும் வெண்கல, வெள்ளி, தங்கப் பதக்கங்கள் மற்றும் ஜனாதிபதி பதக்கங்களை வழங்குவதற்கான செயன்முறையொன்று பின்பற்றப்படும். இதற்காக மாணவர் குறிப்புப் பதிவேடு ஒன்றும் வெளியிடப்படும். குழுவிற்குரிய பதக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக தமது அங்கத்தவர்கள் தனித்தனியாகவும், குழுவாக கூட்டிணைந்தும் செயற்பாடுகளில் ஈடுபடல் வேண்டும். (இதனுடன் தொடர்புடைய ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் வெளியிடப்பட்டுள்ள, "மாணவர் சமுதாயத்தை முயற்சியாண்மை தொடர்பில் வலுவூட்டுதல்" வழிகாட்டல் கையேட்டில் உள்ளக்கப்பட்டுள்ளது.

## 7. செயற்றிட்டங்களுக்கு இறுதி அனுமதி வழங்குதல்..

பாடசாலை முயற்சியாண்மைக் குழுக்களின் புதிய முன்மொழிவுகளின் அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்படும் சகல செயற்றிட்டங்களுக்குமான இறுதி அனுமதி வழங்கும் செயற்பாடுகள், தேசிய பாடசாலை எனின் கல்வி அமைச்சின் வணிகம் மற்றும் வியாபாரக் கல்விக் கிளையின் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடன் தேசிய பாடசாலைகள் கல்வி பணிப்பாளராலும், மாகாணப் பாடசாலை எனின் மாகாண மற்றும் வலய வணிகப் பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரைகளுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளராலும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 8. ஏனைய விடயங்கள்

விளைதிறன் மிக்க முயற்சியாண்மைச் செயற்பாடுகளூடாக ஏதேனும் வருமான வழிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கும் வேளையில் அது தொடர்பில் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும், குறித்த வருமானத்தை எதிர்கால முயற்சியாண்மை செயற்பாடுகளில் முதலீடு செய்வதற்கும் முடியுமான வகையில் பணத்தை வைப்பிலிடல், பயன்படுத்துதல் தொடர்பான செயற்பாடுகள் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும். இவ் விடயம் தொடர்பில் முறையான செயன்முறையொன்றை இதனுடன் இணைந்ததாக எதிர்வரும் காலங்களில் கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

பாடசாலை மாணவர்களை நிலைபேறுடன் கூடிய முயற்சியாண்மையாளர்களாக்குவது இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதானமான குறிக்கோளொன்றாகும். "நிலைபேறுடன் கூடிய முயற்சியாண்மை அபிவிருத்திப் பிரவேசம்" *(Sustainable Entrepreneurship Development Access- SEDA)* பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அவசியமான செயற்பாடுகள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்படும். அதே போன்று மாணவர்கள் எதிர்பார்க்கும் துறைகளுடன் பொருந்தக்கூடிய வகையில் உரிய தொழிற்சாலை ஒன்றில் மேலதிக முயற்சியாண்மை சார் பயிற்சிகளை உச்ச பட்சம் 03 மாதங்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கையெடுக்கப்படும். பாடசாலையிலிருந்து விலகும் போது முயற்சியாண்மையாளராக ஆவதற்கு பொருத்தமான நிலையில் உள்ள மாணவர்களுக்கு முதலீடு மற்றும் இயந்திரோபகரணங்கள் போன்றனவற்றை கொள்வனவு செய்வதற்காக தேவைகளின் அடிப்படையில் உச்ச பட்சம் ரூ. 500,000.00 இற்குட்பட்டு (6% சதவீத வருடாந்த வட்டி வீதத்தின் கீழ்) நிதி உதவிகளை வழங்குவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்படும்.

பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மைக் குழு தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் தகவல் தொடர்பாடல் செய்வது தொடர்பில் கல்வி அமைச்சின் வழிகாட்டலுடன் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சஞ்சிகை ஒன்றை வெளியிடவும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினூடாக நடவடிக்கையெடுக்கப்படும். "மாணவர் சமுதாயத்தினரை முயற்சியாண்மை தொடர்பில் வலுவூட்டுதல்" வழிகாட்டல் கையேட்டிற்கமையவும் கல்வி அமைச்சின் சட்ட விதிமுறைகளுக்கும் அமைவாக முயற்சியாண்மைக் குழுக்களுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

ஏற்கனவே பாடசாலைகளில் இயங்கிவரும் "முயற்சியாண்மைக் கழகங்கள்" உயர் தர மாணவர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், அந் நிகழ்ச்சித்திட்டத்துடன் சமாந்தரமானதாக "கைத்தொழில் முயற்சியாண்மைக் குழுக்களையும்:" நடைமுறைப்படுத்துவது பொருத்தமாகும். அதற்கமைய கைத்தொழில் முயற்சியாண்மைக் குழுக்களை தாபித்தல் தொடர்பில் வெளியிடப்படும் இச் சுற்றுநிருபத்தை நன்கு ஆராய்ந்து தரம் 6 முதல் தரம் 13 வரையிலான வகுப்புக்களுக்காக முறையாக முயற்சியாண்மைக் குழுக்களை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, எதிர்காலத்திற்கு பிரயோசனம் மிக்க செயன்முறை ரீதியான திறன்களை அடைந்துகொள்ள வழிவகுக்கும் இணைப் பாடவிதான செயற்பாடொன்றாக கருதி முயற்சியாண்மைக் குழுக்களை பாடசாலைகளினுள் நடைமுறைப்படுத்துவது இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

Jayasundara

(ஒப்பமிட்டவர்)/

ஜே.எம் திலகா ஜயசுந்தர

செயலாளர்,

கல்வி அமைச்சு

பிரதிகள் -

1. செயலாளர், கைத்தொழில் அமைச்சு
2. அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
3. கணக்காய்வாளர் நாயகம்
4. தலைவர், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை
5. கல்வி அமைச்சின் அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்கள்